

நேற்று முன்தினம் (16.8.,2026) திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்த இயல் இசை நாடக மன்றத்தின் முன்னாள் தலைவர் வாகை சந்திரசேகர் அவர்கள், அண்மையில் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்ற சங்கீத நாடக அகாடமி (அகாதெமி புரஸ்கார்) தேசிய விருதைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாட்டைப் பாதிக்கும் கனிம வளங்கள் திருத்த மசோதா:

# ஒன்றிய அரசைக் கண்டிக்க த.வெ.க. அரசுக்குத் தயக்கம் ஏன்?

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**சென்னை, ஆக. 18 -**

**“தமிழ்நாட்டை பாதிக்கும் கனிம வள திருத்த மசோதா குறித்து த.வெ.க. அரசு வாய்மூடி இருப்பது ஏன்?” என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவா கனிமொழி கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**



தூத்துக்குடி விமான நிலையத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இதுவரை ஒன்றிய அரசை எதிர்த்து தவெக அரசில் இருக்கக்கூடியவர்களோ, முதலமைச் சரோ, அமைச்சர்களோ எந்தக் கேள்வியும் எழுப்பியதாக எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டை பாதிக்கும் வகையில் மூன்று நாட்களுக்கு முன்பு கனிம வளங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா நிறை வேற்றப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதித் தொகை மிகப்பெரிய அளவில் பாதிக்கக் கூடியதோடு, மாநில உரிமைகளையும் பாதிக்கப்படும். ஆனால், இதுதொடர்பாக எந்தவிதமான விவாதமும் நடைபெறவில்லை. இதுபற்றி இதுவரை தவெக அரசோ, அமைச்சர்களோ பேசவில்லை

மேலும், தமிழ்நாட்டை பாதிக்கக்கூடிய இந்த முக்கியமான விவகாரம் குறித்து இன்று வரை தவெக அரசு எந்தக் கருத்தையும் தெரிவிக்க வில்லை. ஒன்றிய அரசை எதிர்ப்போம் என்று வாய் வார்த்தையாகச் சொல்கிறார்களே தவிர, தமிழகத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளில் எதையும் எதிர்த்து பேசுவதில்லை என்பதுதான் உண்மை.

**தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு வாய்ப்பில்லை!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல மைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தற்போதைய அரசு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை நீட்டித்திருப்பது நிச்சயமாக வாழ்த்துக்குரிய ஒன்று. தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி என்பது த.வெ.க. கட்சியினரின் கனவாக இருக்கலாம். ஆனால், எந்தக் காலத்திலும் அதற்கான வாய்ப்பு இல்லை.

தொடர்ந்து தவெக கட்சியினரைச் சேர்ந்த வர்கள் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகிறது. தொடர் குற்றச்சாட்டு கள் வந்துகொண்டிருந்தாலும், சம்பந்தப்பட் டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படவில்லை; கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தூத்துக்குடியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

அதேபோல், பள்ளிகளில் படிக்கும் மாண வர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது. இதுபோன்ற சம்பவங்களில் தவெக அரசு உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. குறிப் பாக, தங்களுடைய கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மீது குற்றச்சாட்டு எழும்போது, கட்சிக்காரர்களை பாதுகாப்பதில்தான் கவனம் செலுத்துகிறார்களே தவிர, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி கூறினார்.

### கர்நாடக வனத் துறையினரால் 3 தமிழர்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு:

# வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் – கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, ஆக.18-

கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல் லப்பட்டது குறித்து வெளிப் படையான விசாரணை நடத் தப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், கழக துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி கருணா நிதி எம்.பி. வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்க ளின் ட்விட்டர் பதிவு வரு மாறு:-

கர்நாடக மாநிலம் சாம் ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில், கர்நா டக வனத்துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று தமிழர்கள் உயிரிழந்துள்ள செய்தி பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி யுள்ளது.

மனித உயிர்களைப் பறிப் பதற்கு எந்த அரசுக்கும் அதி கார அமைப்பிற்கும் உரிமை கிடையாது.

உயிரிழந்தவர்களின் குடும் பத்தினர் எழுப்பியுள்ள சந் தேகங்களைக் கருத்தில் கொண்டு வெளிப்படை யான விசாரணை நடத்தப் பட வேண்டும். உயிரிழந்த மூன்று பேரின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசு உரிய நிவாரணம் வழங் குவதோடு, இந்தச் சம்பவத் தில் உண்மை நிலையை வெளிக்கொணர கர்நாடக அரசிற்கு தொடர்ந்து அழுத் தம் தர வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கரு ணாநிதி எம்.பி. அவர்கள் பதி விட்டுள்ளார்.

### அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் நிகழ்ந்து 5ஆம் ஆண்டு நிறைவு!

# இடஒதுக்கீடு அடிப்படையில் அர்ச்சகர் பணி நியமனத்தை நடத்துக!

## அரசுக்கு–தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் கோரிக்கை!

சென்னை, ஆக.18-

தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் வா.ரங்க நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப் பட வேண்டிய நாள் ஆகஸ்ட் 14,2021. தமிழக வரலாற்றில் மன்னர்களின் ஆட்சிகளில் காணக் கிடைக்காத சமத்து வம், சமூகநீதி என்ற விளிம்பு நிலை மக்களை மையப்படுத் திய கோட்பாடுகள் ஆட்சி அதிகாரத்தில் விதைக்கப் பட்டு வளர்ந்து செழித்த காலம், திராவிட இயக்கத் தின் ஆட்சிக்காலம்.

சமூகத்தின் மிக முக்கிய அதிகார மையமான கோயில் கருவறையில் 2000 ஆண்டுக ளாக நிலவி வந்த பார்ப்பனீய மேலாண்மை அடிப்படையி லான கருவறைத் தீண்டாமை இருள் அகற்றப்பட்ட கால மும் இதுதான்.

அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் நிகழ்ந்து இன்று டன் 5ஆம் ஆண்டு நிறைவ டைகிறது.

5 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு 29 அனைத்து சாதி அர்ச்சக மாணவர்களை கோயில் அர்ச்சகர்களாக நிய மனம் செய்தது.அந்த அர்ச்ச கர்களுக்கு ஏராளமான நெருக்கடிகளை ஆர் எஸ் எஸ் பார்ப்பனிய சக்திகள் கொடுத்தாலும் அதையும் தாண்டி சிறப்பான முறையில் கோயில்களில் பூஜை செய்து குடமுழுக்கு நடத்தி மக்கள் மத்தியில் முறையான அங்கீ காரத்தை பார்ப்பனரல்லாத 29 அர்ச்சகர்களும் பெற்றுள் ளனர் என்பது இத் தருணத் தில் மிகவும் நினைவு கூரத்தக் கது.

நம்மை கவலை கொள்ளச் செல்லும் விசயங்களும் தொடர்ந்து நடந்து வருவதை புதிய அரசு இந்நாளில் பரிசீ லிக்க வேண்டியுள்ளது. அர்ச் சகர் நியமனம், விதிகள், இந்து சமய அறநிலையத் துறை சட்டத்தை எதிர்த்த வழக்குகளில் அர்ச்சகர் நிய மன விதிகள் ரத்து செய்யப் பட்டதுடன், ஆகமக் கோயில் பார்ப்பனருக்கு, ஆகமம் அல்லாத கோயில்கள் சூத்திர, பஞ்சமருக்கு எனப் பிரிக்கும் முயற்சிகளும் நடக் கிறது.

இதை தமிழக அரசு அனு மதிக்க கூடாது. புதிய விதி கள், சட்டம் கொண்டு வந்தோ அல்லது உச்சநீதிமன் றம் சென்றோ இப்பார்ப்ப னீய சதியை முறியடிக்க வேண்டும். அர்ச்சகர் நியம னத்திற்கு ஆகமம் தடை யில்லை குறிப்பிட்ட கோயி லில் ஆகமத்தை படித்த எந்த இந்துவும் அர்ச்சகராகலாம், சாதி தடையில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும், திருச்சி வயலூர் முருகன் கோயில் அர்ச்சகர் நியமனத்தை ரத்து செய்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதன் தீர்ப்பிற்கு, 11.08.2023 அன்று மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திருவாளர்கள் S.S.சுந்தர் & பரத சக்கரவர்த்தி அமர்வு விதித்த தடையும், அர்ச்சகர் நியமனத்திற்கான சட்டத் தடைகளை அகற்றி யது .

அனைத்து சாதி இந்துக்க ளும் அர்ச்சகர் ஆவதை தொடர்ச்சியாக எதிர்த்து வரும் பார்ப்பனர்கள், ஆர் எஸ்எஸ், பாஜக, இந்து முன் னணியினர் தொடர்ந்து அர்ச் சகர் நியமனத்துக்கு எதிரான பல்வேறு முட்டுக்கட்டை களை உருவாக்கி உயர் மற் றும் உச்ச நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து தற் போது தமிழகத்தில் உள்ள கோயில்களில் அர்ச்சகர் நிய மனம் செய்ய உச்சநீதிமன்றத் தில் தடைபெற்றுள்ளனர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எம் எம் சுந்தரேஷ் தலைமை யிலான அமர்வு விதித்த தடை கடந்த மூண்றாண் டாக நீக்கப்பட வில்லை. உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு, மேல் முறையீடும் செய்யப்ப டவில்லை.

அர்ச்சகர் நியமனம் தொடர்பாக விதிகளை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்த பின்பு, இதுவரை புதிய விதிகளுக்கான எந்த நடவடிக்கையும் இல்லை.

அர்ச்சகர் நியமனத்திற் கான ஆகமங்களில் சாதி தடையாக இருக்க முடியாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்த பின்பும் அர்ச்சகர் நியமன நடவடிக் கையில் எந்த முன்னேற்றமும் இல்லை

எனவே, இட ஒதுக்கீடு அடிப்படையில் விரைந்து கோயில்களில் உடனடியாக அர்ச்சகர் பணிநியமனத்தை நடத்த வேண்டும்.

மிக முக்கியமாக, எங்களு டன் 2008 ஆம் ஆண்டிலேயே பயிற்சி முடித்து தீட்சை பெற்ற 178க்கும் மேலான மாணவர்கள் உள்ளனர். அதன்பின் சுமார் 400 மாண வர்கள் படித்து முடித்துள்ள னர். இவர்களுக்கு உடனே பணிநியமனம் வழங்க வேண் டும். இன்றுவரை மதுரை மீனாட்சி யம்மன், திருச்செந்தூர், பழனி முரு கன் கோயில்கள், திருவரங்கம் அரங்கநாதர், சென்னை கபா லீசுவரர் கோயில்களில் தமிழ்ச் சமுதாயத்தின் தேவர், கவுண்டர், யாதவர், வன்னி யர், செட்டியார், பிள்ளை, ஆதிதிராவிடர் உள்ளிட் டோர் கோயில் கருவறையில் நுழைய முடியவில்லை என் பது கடும் வேதனைக்குரியது.

அரசியல் சட்டத்தின் ஆட்சி என்பதற்கான சவால் இது.

எனவே இந்நாளில் தமி ழக முதல்வர் அவர்கள், தமிழ் மக்கள் உழைப்பில் உருவாக் கப்பட்ட கோயில்களில் தமி ழையும் தமிழர்களையும் நிலைபெறச் செய்ய வேண்டு கிறோம்.

மேற்படி பிரச்சினை களுக்கு நிரந்தர தீர்வாக

(i) தடையற்ற அர்ச்சகர் நியமனத்திற்கு உரிய சட்ட ஆலோசனை வழங்க தமிழக அரசு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள், சட்ட வல் லுநர் குழு அமைக்க வேண் டும்.

(ii)அனைத்து சாதி இந்துக் கள் அர்ச்சகர் நியமனத்திற்கு சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும்.

(iii) 17 ஆண்டுகளாக வேலைக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கு 20072008 ஆண்டில் மாணவர்களுக்கு தற்போது வரை உள்ள மாதங்களுக்கு இழப்பீடும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாதங்களி லும் இழப்பீட்டுத் தொகைய மாதம் ரூபாய் 20,000 வேலை வழங்கும் வரை தமிழக அரசு வழங்க வேண்டும்.

(iv) அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாண வர்களுக்கு மாதாந்திர உத வித்தொகை ரூ.15,000 வழங்க வேண்டும்

(vi) தமிழக அரசு மூத்த ஐஏஎஸ் அதிகாரி ஒருவரை நியமித்து அர்ச்சகர் மாணவர் பிரச்சனைக்கான நிரந்தர தீர் வும், கோயிலில் சமத்து வத்தை நிலை நாட்டு வதற் கான உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும்

(Vii)அனைத்து சாதி அர்ச் சக பயிற்சி பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஐந்து பேர் இறந்து விட்டனர். அவர்க ளின் குடும்ப உறுப்பினர் ஒரு வருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

தமிழக முதல்வரின் நேரடி தலையீடு இல்லாமல் அர்ச்ச கர் மாணவர் திட்டம் ஆல யங்களில் சமத்துவம் நிறை வேற வாய்ப்பு இல்லை.

எனவே கலைஞரின் நினைவு மாதமான ஆகஸ்ட் மாதத்தில், கலைஞரின் கன வும், தமிழக முன்னாள் முதல் வரின் நியமனங்களும், எதிர் கால நியமனங்களும் கேள்விக்குள்ளான சூழலில் உரிய கோரிக்கையை தமிழக முதல்வர் முன்பு வைக்கி றோம்.

உரிய நடவடிக்கை எடுத்து, ஈராயிரம் ஆண்டு கருவறைத் தீண்டாமை இருள் முழுமையாக அகற்றக் கோருகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

### பென்ஷன் மறு பரிசீலனையின்றி 30 ஆண்டுகளாக பாதிப்படைந்து வரும்

# 8 லட்சம் வங்கி ஊழியர்களுக்கு தாமதமின்றி நீதி வழங்குக!

## பாரத் ஸ்டேட் பேங்க் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களின் கூட்டமைப்பு வலியுறுத்தல்!

தஞ்சை, ஆக.18



பாரத ஸ்டேட் பேங்க் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கூட்ட மைப்பின் பத்தாவது பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மாளிகை, சரோஜ் நினைவகத்தின், என். எம்.சுந்தரம் அரங்கில் நடந்தது.

பொதுக்குழு கூட்டத்துக்கு அமைப்பின் தலைவர் எஸ். பி. இரா மன் தலைமை வகித்தார். பாரத ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் டி.சிங் காரவேலு, துணைத்தலைவர் டி.வி. சந்திரசேகரன், துணைச்செயலாளர் எம்.முருகையா, பொருளாளர் என். சுப்பிரமணி யன், உதவிப் பொருளா ளர் வீ. பூமிநாதன் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

வருகை தந்த அனைவரையும் மதுரை பரவை எஸ்.பாலசுப்பிரமணி யன் வரவேற்றார். சென்னை ரத்தி னவேல் சுப்பிரமணி நன்றியுரை ஆற்றினார். நீண்ட விவாதங்களுக்கு பிறகு நாட்டின் நலன், வங்கி ஓய்வூ தியர்களின் நலன் சார்ந்த கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

பொதுத்துறை அமைப்பான எல்.ஐ.சி யின் பங்குகளை விற் பனை செய்யும் தவறான முடிவை ஒன்றிய அரசு தாமதமின்றி திரும் பப் பெற முன் வரவேண்டும்.

பொதுத்துறை வங்கிகளில் வாடிக்கையாளர்களிடம் மினிமம் பேலன்ஸ் வைக்காததற்காக தண்ட னையாக பிடித்தம் செய்யப்பட்ட ரூபாய் 26100 கோடியை திரும்ப அளிப்பதோடு, இத்தகைய தவறான நடைமுறையை தாமதமின்றி கைவிட பொதுத்துறை வங்கிக ளுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்த வேண்டும். வங்கி ஓய்வூதியவர்க ளுக்கு பஞ்சப்படி உயர்வை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கும் நடைமுறையை தாமதமின்றி நடை முறைப்படுத்த பொதுத்துறை வங்கி நிர்வாகங்கள் முன்வர வேண்டும்.

பென்சன் மறுபரிசீலனை செய் யாமல் (PENSION UPDATION) கடந்த முப்பது ஆண்டுகளாக பாதிப் படைந்து வருகிற எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு தாமதமின்றி நீதி வழங்க பொதுத்துறை வங்கிகள் நிர் வாகம் முன் வரவேண்டும்

கடந்த 1995 ஆம் ஆண்டு கையெழுத்தாகி, 2003 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒப்பு தல் வழங்கப்பட்ட சட்டத்தின் படி, ரிசர்வ் வங்கி, நபார்டு வங்கி ஆகிய வற்றுக்கு அளிக்கப்படுவதைப் போல ஒவ்வொரு வங்கித்துறை ஊதிய ஒப்பந்தத்தின் போதும் ஓய் வூதியம் மறுபரிசீலனை செய்யப் பட்டு உயர்த்தி வழங்கப்பட வேண் டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகள் நிகர இலா பமாக 689000 கோடி ஈட்டி ஒன்றிய அரசுக்கு வழங்கி உள்ளது.

கடந்த நிதி ஆண்டின் இறுதியில் பொதுத்துறை வங்கி ஊழியர்கள் செலுத்திய பென்சன் தொகை 486000 கோடியாகும். கடந்த ஆண் டுகளில் நாட்டின் வளர்ச்சிக்காகவும் சமுதாய மேம்பாட்டிற்காகவும் பசி நோக்காது கண் துஞ்சாது உழைத்த எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்க ளுக்கு சட்டப்படி வழங்கப்படவேண் டிய ஓய்வூதிய மறுசீரமைப்பை வழங்காமல் வஞ்சிப்பதும், நீதிமன் றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கும் சூழலை உருவாக்கி, கார ணம் இன்றி கால தாமதம் செய்யா மல் 1995 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை ஓய்வூதியத்தை உயர்த்தி மறுசீரமைத்து, ரிசர்வ் வங் கியின் விகிதப்படி எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு தாமத மின்றி நீதி வழங்கி பொதுத்துறை வங்கிகளும், இந்திய வங்கிகள் நிர் வாகமும், ஒன்றிய அரசும் நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென AFCCOM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

மூத்த குடிமக்கள் அனைவருக்கும் மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவ தைப் போல இலவச பேருந்து பயண வசதி அளிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்

அண்டை மாநிலங்களான மஹா ராஷ்ட்ரா, ஹரியானா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் மூத்த குடிமக் களுக்கு இலவச பேருந்து பயண வசதி வழங்கப்பட்டு வருகிறது. கர்நா டகா, கேரளா, ஆந்திரா, தெலுங் கானா, மேற்கு வங்கம் ஆகிய மாநி லங்களில் மூத்த குடிமக்களுக்கு 25 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை பேருந்து பயண கட்டண சலுகை வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைகளில் முன்னேற்ற தடம் பதித்து வரும் தமிழ்நாட்டில் மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்கு வது அவர்கள் வாழ்நாளில் நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கு ஆற்றிய ஆக்கப்பூர்வமான பங்கை அங்கீகரிப்பதாக அமைவதோடு அர சின் மீது பொது மக்களுக்கு நல் லெண்ணத்தை உருவாக்குவதாக அமையும் என்பதை கருத்தில் கொண்டு செயல் படுத்த தமிழக அரசு முன் வரவேண்டும் என AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

**பங்கேற்றோர்**

பொதுக்குழுவில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.சந்திரா கில்பர்ட், என்.பாண்டுரங்கன், பாண்டிச்சேரி எஸ்.கருணாகரன், கோவை எம்.ரகு நாதன், வேலூர் ஆர்.லோகநாதன், குன்னூர் எம்.ராஜகோபால், நாகர் கோயில் அஹமது ஹுசைன், செய லாளர் எம். கே. மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், ஒரத்த நாடு ஸ்டேட் பேங்க் ஸ்டாப் யூனியன் முன்னாள் கிளைச் செயலாளர் வி.சம்பத் பொதுக்குழுவுக்கான ஏற் பாடுகளை செய்திருந்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலிமாறன் அவர்களின் 93 ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை தஞ்சை மத்திய மாவட்ட அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு – கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மகேஷ் கிருஷ்ணசாமி எம்.ரெங்கசாமி, தலைமை கழக நிர்வாகிகள் து.செல்வம் சி.இறைவன் தஞ்சை மாநகர செயலாளர் சண்.இராமநாதன் தஞ்சை மாநகர மேயர் (பெ) அஞ்சுகம் பூபதி, மாவட்ட கழக நிர்வாகிகள் எல்.ஜி அண்ணா, மணிமாறன், புண்ணியமூர்த்தி, கனகள்ளி பாலாஜி ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இல்லத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 93வது பிறந்த நாளையொட்டி அவரது சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல. மேகநாதன், ப.கோவிந்தசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சோ.பா.மலர்வண்ணன், மகா.குமார், ஆ.தாமல்ஆல்வாளடிசன், கே.பழனியப்பன், நாகை நகர கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து பொதுக்குழு உறுப்பினர் கோ.சிவக்குமார் மற்றும் பலர் உள்ளனர்




மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் கிடாரங்கொண்டான் ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலீக் மற்றும் சுவாமிநாதன் உள்ளிட்டோர் உள்ளனர்.